திரு. டி. எம். வெங்கடாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கால்வாய் எந்த ஆண்டில் ஆரம்பிக்கப் பட்டது? அதற்கு எவ்வளவு தொகை செலவழிக்கப்பட்டிருக் கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனுடைய மதிப்பீடு ரூ. 28½ இலட்சமாக இருக்கிறது. இந்தக் கால்வாயை வெட்டும் பணி 1987-லே முடிவதாக முடிவு செய்யப்பட்டு, 2/87-லே முடிப்பதாக இருந்தது. ஆனால் அதிலே பாறைகள் அதிகமாக இருந்த காரணத்தினால் வெடி மருந்து கிடைக்காது இருந்து அந்தச் சூழ்நிலையை கருத்தில்கொண்டு கொஞ்சம் காலதாமத மானது. இருந்தாலும் அதிகாரிகளிடம் சொல்லி, உடனடியாக 2, 3 மாத காலத்திற்குள்ளாக முடிக்கவேண்டுமென்று கேட்டிருக் கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள். முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

ஒழுங்குப் பிரச்சினை எழுப்புவது குறித்து.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, காங்கிரஸ் கட்சி ஆட்சி செய்தபோது, சபாநாயகராக இருந்த திரு. செல்லபாண்டியன் அவர்கள் ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப வேண்டுமென்று சொன்னால், கட்சித் தலைவர்கள் மூலமாகத் தான் எழுப்ப வேண்டுமென்று அவை முன்னவர் அவர்கள் சொன்னதாகப் பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. அதைப் பற்றிய விளக்கத்தை நமது அவை முன்னவர் அவர்கள் தெரிவிப் பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அன்று நான் தெளிவாகக் குறிப்பிட்டதை, சரியாக சில ஏடுகள் வெளியிடவில்லை. ... நான் ... தெளிவாகக் குறிப்பிட்டேன்.

இந்த சட்டதிட்ட விதிமுறைகளிலே எந்தெந்த விதிமுறைகளின் கீழ் எதை எதை எழுப்ப வேண்டுமென்று இருக்கிறது. அந்த விதி முறைகளுக்கு உட்படாமல் சில எதிர்பாராத நடப்புகள் நாட்டிலே ஏற்படுகின்றபோது அதுபற்றிய விளக்கங்களை உடனடியாகப் பெறுகின்றபோது அதை இந்த அவையிலே எழுப்புகின்ற வாய்ப்பு ஏற்படும். Private Member Question என்ற பெயரில், திடீரென்று எழுப்ப வாய்ப்பு உள்ளது. அதையும் எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பலாம் என்று ஒரு முறை ஏற்கனவே மாண்புமிகு திரு. செல்லபாண்டியன் அவர்கள் இருந்தபோது இருந்தது. இப்போதும் முன் வரிசையிலே இருக்கிற தலைவர்கள் அப்படி எழுப்பலாம் என்ற ஒரு முறை இருக்கிறது என்று குறிப்பிட்டேனே தவிர, "Point of order" என்பது எந்த உறுப்பினரும் எந்த காலத்திலும் எழுப்பலாம் என்று விதிமுறைகளில் இருக்கிறது. அதைப்பற்றி நான் குறிப்பிடவேயில்லை. ஒழுங்கு முறையை யார் வேண்டுமானாலும், எழுப்பலாம், எப்போதும் எழுப்பலாம். அதை முடிவு கட்ட வேண்டியது அவைத் தலைவர் அவர்கள் தான் தவிர, இதை ஒப்புக்கொள்வதும், ஒப்புக்கொள்ளாமல் இருப்பதும், அதற்குத் தீர்ப்பு அளிப்பதும், அது பற்றிய முழு விளக்கங்களையும் அளிப்பதும் அவரைச் சார்ந்தது என்று தெளிவாக இருக்கிறது. Point of order பற்றி நான் குறிப்பிடவே இல்லை Private Member Question என்பதைப் பற்றி திடீர் திடீரென்று சில பல பிரச்சனைகள், எந்த விதிமுறைகளுக்கும் அடங்காமல் கேட்டு விடுகிறார்கள்—அதைக் கேட்பதற்கு ஒரு கட்டுப்பாடு வேண்டுமென்றுதான் நான் சொன்னேனே தவிர பாயின்ட் ஆப் ஆர்டர் பற்றி நான் பேசவே இல்லை. ஒழுங்குப் பிரச்சினையை யார் வேண்டுமானாலும் கிளப்பலாம். 234 பேர்களும் கிளப்புவதற்கு பேரவை தலைவர் அவர்களுடைய அனுமதி வேண்டும். அவருடைய அனுமதி பேரில் கிளப்ப வேண்டும். தீர்ப்பு அளிக்க வேண்டிய முழுப் பொறுப்பு அவருக்கு உண்டு. (குறுக்கீடு, கூச்சல்—குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேறு Point of Information கிடையாது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS